No. of Printed Pages : **4**

**9191**

பதிவு எண் | | | | | | | |

# Part III — Vocational Subjects

# வேளாண் அறிவியல்

# AGRICULTURAL SCIENCE

( தமிழ் வழி / Tamil Version )

கால அளவு : 3.00 மணி நேரம் ] [ மொத்த மதிப்பெண்கள் : 90

**அறிவுரைகள் :** (1) அனைத்து வினாக்களும் சரியாக பதிவாகி உள்ளதா என்பதனை சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிப்பில் குறையிருப்பின் அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாக தெரிவிக்கவும்.

(2) **நீலம்** அல்லது **கருப்பு** மையினை மட்டுமே எழுதுவதற்கும், அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும். படங்கள் வரைவதற்கு பென்சில் பயன்படுத்தவும்.

## பகுதி - I

**குறிப்பு :** (i) **அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்கவும். **15x1=15**

(ii) கொடுக்கப்பட்டுள்ள **நான்கு** மாற்று விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.

**1.** உர உற்பத்தியைப் பெருக்க இந்தியாவில் ஏற்படுத்தப்பட்ட திட்டம் _________.

(அ) சாம்பல் புரட்சி (ஆ) தங்கப் புரட்சி

(இ) கருப்புப் புரட்சி (ஈ) வெள்ளிப் புரட்சி

**2.** 3-10 நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு _________.

(அ) மத்தியகால முன்னறிவிப்பு (ஆ) குறுகியகால முன்னறிவிப்பு

(இ) நீண்டகால முன்னறிவிப்பு (ஈ) நிகழ்கால முன்னறிவிப்பு

**3.** தாவரங்களால் பயன்படுத்தப்படும் நில நீர்வகை :

(அ) உறிஞ்சு நீர் (ஆ) புவியீர்ப்பு நீர்

(இ) நுண்புழை நீர் (ஈ) அனைத்தும்

[ திருப்புக

4. கீழ்க்கண்டவற்றுள் இலை நறுமணப் பயிரை குறிப்பிடுக.
(அ) மஞ்சள் (ஆ) மிளகு (இ) ஏலக்காய் (ஈ) புதினா

5. காய்கறிப் பயிர்களுக்கு பயன்படுத்தப்படும் நாற்றங்கால் முறையை கூறுக.
(அ) மேட்டுப்பாத்தி நாற்றங்கால் (ஆ) சேற்று நாற்றங்கால்
(இ) புழுதி நாற்றங்கால் (ஈ) பாய் நாற்றங்கால்

6. விதைகளை விதைக்க பயன்படக்கூடிய கருவி :
(அ) கூம்பு வடிவ களை எடுக்கும் கருவி
(ஆ) நாட்டு விதைப்புக் கருவி
(இ) விசைத்தூவுவான்
(ஈ) பார் கலப்பை

7. பண்படுத்தப்பட்ட நிலத்தில் விதைகளை இடுதல் __________ எனப்படும்.
(அ) அறுவடை (ஆ) நடவு
(இ) விதைப்பு (ஈ) மேற்கூறிய அனைத்தும்

8. வட்டப்பாத்திப் பாசனம் __________ பயிருக்கு ஏற்றது.
(அ) தென்னை (ஆ) பருத்தி (இ) கரும்பு (ஈ) நெல்

9. சூப்பர் பாஸ்பேட் __________ நிலையில் உள்ளது.
(அ) சிறு கட்டி (ஆ) தூள் (இ) குருணை (ஈ) படிகம்

10. களைகளால் பயிரில் ஏற்படும் பாதிப்பின் அளவு __________.
(அ) 45 சதம் (ஆ) 20 சதம் (இ) 5 சதம் (ஈ) 30 சதம்

11. அயல் மகரந்த சேர்க்கைக்கு உதவும் பூச்சி __________.
(அ) சாறு உறிஞ்சும் பூச்சி (ஆ) மாவுப் பூச்சி
(இ) அசுவினி (ஈ) தேனீ

12. பாலை தயிராக்க உதவும் நுண்ணுயிரி :
(அ) சக்கரோமைசிஸ் (ஆ) ஈஸ்ட்
(இ) அஸ்பர்ஜில்லஸ் (ஈ) லேக்டோபேசில்லஸ்

13. விதையில்லாக் கனிகளை உருவாக்க __________ உதவுகிறது.
(அ) எத்திலின் (ஆ) ஆக்ஸின்
(இ) வளர்ச்சி தடுப்பான் (ஈ) ஜிபரலின்

**14.** வாங்குபவர்களும் விற்பவர்களும் தொடர்பு கொள்ளும் இடம் _________.
(அ) நபார்டு வங்கி (ஆ) வேளாண் விரிவாக்க மையம்
(இ) வேளாண் அறிவியல் மையம் (ஈ) சந்தை

**15.** நீண்ட கடற்கரை அமைந்துள்ள மாநிலத்தில் _________ முதல் இடம் வகிக்கிறது.
(அ) குஜராத் (ஆ) தமிழ்நாடு
(இ) ஆந்திரபிரதேசம் (ஈ) கேரளா

## பகுதி - II

**குறிப்பு : எவையேனும் பத்து** வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் **28 -க்கு கட்டாயமாக** விடையளிக்கவும். **10x3=30**

**16.** வெண்மைப் புரட்சி என்றால் என்ன ?

**17.** வானிலை முன்னறிவிப்பு என்றால் என்ன ?

**18.** மண் அரிமானம் குறிப்பு வரைக.

**19.** மூலிகைப் பயிர்கள் பற்றி எழுதுக.

**20.** பண்படுத்துதலின் வகைகளை எழுதுக.

**21.** விதை நேர்த்தி என்றால் என்ன ?

**22.** அடிமண் பாசனம் என்றால் என்ன ?

**23.** நைட்ரஜன் பற்றாக்குறை அறிகுறிகள் யாவை ?

**24.** ஒருங்கிணைந்த களை மேலாண்மை என்றால் என்ன ?

**25.** தீங்குயிரி – வரையறு.

**26.** கொய் மலர்கள் – குறிப்பு வரைக.

**27.** அரசு திட்டங்களில் மூன்றை எழுதுக.

**28.** பாசன நீரில் காணப்படும் உப்புக்கள் யாவை ?

[ திருப்புக

## பகுதி - III

குறிப்பு : **எவையேனும் ஐந்து** வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் **35 -க்கு கட்டாயமாக** விடையளிக்கவும். **5x5=25**

**29.** வேளாண் துறையில் நடைமுறையில் உள்ள திட்டங்கள் ஐந்தினைப் பட்டியலிடுக.

**30.** மலர்ப் பயிர்களை வகைப்படுத்துக.

**31.** பரவல் பாசனம் என்றால் என்ன ? அதன் நிறைகள் மற்றும் குறைகளை எழுதுக.

**32.** தீங்கு விளைவிக்கும் பூச்சிகள் பற்றி விளக்குக.

**33.** இரசாயன மற்றும் சட்ட முறைகளில் நோய் மேலாண்மை பற்றி கூறுக.

**34.** நன்னீர் மீன் வளர்ப்பினைப் பற்றி எழுதுக.

**35.** விதைப்பு முறைகள் பற்றி விளக்குக.

## பகுதி - IV

குறிப்பு : **அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்கவும். **இரண்டு** பக்க அளவில் விடையளிக்கவும். **2x10=20**

**36.** (அ) அமில மண்ணை பற்றி விவரிக்கவும்.

**அல்லது**

(ஆ) பயிர் சாகுபடித் திட்டம் பற்றி விரிவாக எழுதுக.

**37.** (அ) களைகளின் தீமைகளை விவரிக்கவும்.

**அல்லது**

(ஆ) தோட்ட வேலைக்கு பயன்படும் கருவிகள் பற்றி விளக்குக.

- o O o -